தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,
சென்னை - 600 006

ந.க.எண்.40207/சி5/இ4/2015,நாள். 28.10.2020

*******

பொருள் : பள்ளிக்கல்வி– உடற்கல்வி ஆசிரியர்கள் நேரடி நியமனம் கலந்தாய்வு நடைபெற உள்ளது – முதன்மைக்கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள்– அறிவுரைகள் வழங்குதல் –சார்ந்து.

பார்வை : தலைவர் ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6, அவர்களின் ந.க.எண்.3271/ஆர்3/2013, நாள் 28.10.2020 (உடற்கல்வி).

*******

அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள உடற்கல்வி ஆசிரியர் காலிப்பணியிடங்களுக்கு போட்டித்தேர்வு மற்றும் இதர விதிமுறைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள 551 உடற்கல்வி ஆசிரியர் பணிநாடுநர்கள் பட்டியல், பார்வையில் காணும் ஆசிரியர் தேர்வு வாரியக் கடிதம் வாயிலாக பெறப்பட்டுள்ளது.

இப்பணிநாடுநர்களுக்கு பணி நியமன ஆணை அந்தந்த மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலகங்களில் EMIS Online கலந்தாய்வு மூலம் வழங்கப்படவுள்ளது.

மேலும் நேரடிநியமனம் கலந்தாய்வு சார்ந்து இணைப்பிலுள்ள படிவத்தில் முதன்மைக் கல்வி அலுவலகக் கோப்பு எண்/ முதன்மைக் கல்வி அலுவலரின் பெயர் ஆகிய விவரங்களை பூர்த்தி செய்து உடன் மின்னஞ்சலில் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உடற்கல்வி ஆசிரியர் பதவிக்கான பணிநாடுநர்களின் **வீட்டு முகவரிக்கு** அந்தந்த மாவட்டங்களில் உள்ள முதன்மைக்கல்வி அலுவலகங்களுக்கு நேரடி நியமன கலந்தாய்வில் தவறாது கலந்து

கொள்ளும் வகையில், சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் **தகவல் அனுப்பிட வேண்டும்.**

| | | |
|---|---|---|
| 1 | உடற்கல்வி ஆசிரியர் பணி நியமன கலந்தாய்வு நடைபெறும் நாள் | 03.11.2020, 04.11.2020 (செவ்வாய், புதன் கிழமை) |

மேலும், இணையதளம் வாயிலான கலந்தாய்வுக்கு உரிய கணினி வசதிகள் எற்பாடு செய்ய வேண்டும். கலந்தாய்வு எவ்வித குறையுமின்றி நடத்திட ஏற்கெனவே இணையதள கலந்தாய்வுப் பணி மேற்கொண்ட கணினி இயக்குபவர்களையே இக் கலந்தாய்வுப் பணிக்கும் ஈடுபடுத்திடல் வேண்டும். கலந்தாய்வின் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, இப்பணிகளில் தவறேதும் ஏற்படாமல் கவனமுடன் செயல்படுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளி கல்வி இயக்குநர்

இணைப்பு : பணிநாடுநர்கள் தெரிவுப்பட்டியல்

**பெறுநர்**

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்

## வழிமுறைகள்

1 தெரிவுப் பட்டியலில் ( உடற்கல்வி ஆசிரியர்கள் 551) உள்ள பணி நாடுநர்களின் அனைத்து கல்வித் தகுதிகளையும் சரிபார்த்த பின்னரே அவர்களுக்குப் பணிநியமன ஆணை வழங்குதல் வேண்டும். இதில் ஏதேனும் தவறு எற்படின் நியமன அலுவலரே பொறுப்பாவார் எனத் தெரிவிக்கலாகிறது. மேலும், கல்வித் தகுதிச் சான்றிதழ்களில் மாறுபட்ட கல்வித் தகுதி இருப்பின் அவ்விரத்தினை ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு தெரிவிக்க வேண்டியுள்ளதால் நியமன ஆணையை நிறுத்தி வைத்து அவ்விவரத்தினை தவறாது பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு தெரிவிக்க வேண்டும்

2 தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் மற்றும் தலைப்பெழுத்தில் பிழைகள் ஏதேனும் இருப்பின் உரிய ஆவணங்களுடன் ஒப்பிட்டு திருத்தம் மேற்கொள்ள வேண்டும்.

3 தெரிவு செய்யப்பட்டவர்களின் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை கண்டறிதல் மற்றும் பிற மாநில சான்றிதழ்களை மதிப்பீடு (Evaluation) செய்தல் ஆகியவற்றை விதிமுறைகளுக்குட்பட்டு மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

4 பணி நியமனம் ஆணை பெற்றவர்கள் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் பணியில் சேரவில்லையெனில் உரிய விதிமுறைகளின்படி அவர்களது நியமன ஆணையை இரத்து செய்து அதன் விவரத்தையும் பணியில் சேராதவர்களின் பட்டியலையும் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

5 பணிநாடுநர்களின் கல்வித் தகுதிக்கு இணைத்தன்மை சார்ந்த அரசாணை (Equivalence இல்லாத

பட்டம்/பட்டயச்சான்றிதழ்களைப் பொறுத்த வரையில்) சரிபார்த்த பின்னர் நியமனம் வழங்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

6 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் முறையான ஊதிய விகிதத்தில் அமைந்த உடற்கல்வி ஆசிரியர் காலிப்பணியிடங்கள் விடுபடாமல் அளிக்கப்பட வேண்டும்.

7 கலந்தாய்வில் பங்கு பெறும் பணி நாடுநர் பிற மாவட்டங்களில் உள்ள காலிப்பணியிடத்தினைத் தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் அந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் நியமன அலுவலர் என்பதால், நியமன ஆணை தானாகவே (Automatically generated order ) அந்த முதன்மைக் கல்வி அலுவலர் இணைய தள முகவரிக்கு சென்றுவிடும். அந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பதிவிறக்கம் செய்து நியமன ஆணை வழங்க வேண்டும்.

## படிவம்

## உடற்கல்வி ஆசிரியர் நேரடி நியமனம்

## மாவட்டங்களில் பணிபுரியும் முதன்மைக் கல்வி அலுவலரின் பெயர், மாதிரி கையொப்பம் மற்றும் கோப்பின் ந.க.எண் விவரம் கோருதல்

| வ.எண் | மாவட்டம் | ந.க.எண் | முதன்மைக் கல்வி அலுவலரின் பெயர் |
|---|---|---|---|
| | | | |